පැසිස්ට්වාදයට එරෙහි වීමේ හැකියාව වාමාංශිකයටද අහිමි වන විට පැසිස්ට්වාදයේ නම්‍යශීලී බව වාමාංශිකය සිය විප්ලවීය දේශපාලනය ලෙසින් පෙන්වය. මෙය පැසිස්ට්වාදය පිළිබඳ වැටහීම දේශපාලනමය ලෙසින් විකෘති කරයි.

එමෙන්ම ඉතා දරුණු ප්‍රචණ්ඩත්වයක් සහිත ප්‍රජාතන්ත්‍ර ප්‍රතික්ෂේපය යනු පැසිස්ට්වාදයේ එක් දේශපාලන ගුණාංගයකි. මෙසේ පැසිස්ට්වාදය  නම්‍යශීලී වන විට පැසිස්ට්වාදයේ විරුද්ධ දිශාවෙන් එක් දේශපාලනමය බෙදුමක් නිර්මාණය වනු ඇත.

1. කම්කරු ජනයා පක්ෂයකින් තොර අතිරේකයන්ගෙන් සහිත සමාජයේ නැත්නම් පක්ෂයට පිටින් ඇති අතිරේකයන් සහිත සමාජයේ.

1. පැසිස්ට්වාදය ඔවුන්ව ආකර්ශනය කර ගනියි.

2. නොහැකි විට පැසිස්ට්වාදය ඔවුන්ව සිය අරමුණුවලට උපයෝගී කර ගනියි.

2. මෙම ප්‍රචණ්තාවය පක්ෂය ඇතුලත බෙදුමක් ඇති කරයි.

1. පැසිස්ට්වාදය අහිමි වෙමින් පවතින හෝ එය අත් හැර දමා ඇත යැයි සිතන ආකල්පයෙන් යුත් පැසිස්ට්වාදයට වැරදි ලෙසින් ප්‍රවිශ්ට වෙයි.

2. මෙම නම්‍යශීලී වාතාවරණය කෙසේ උපයෝගී කර ගන්නේද යන තර්කය සුවිශේෂී වන්නේය.

තමා වටා ඇති ප්‍රචණ්ඩ ව්‍යුහය තුල පැසිස්ට්වාදය විසින් සිදු කරනු ලබන නම්‍යශීලීත්වය තමාව දේශපාලනමය වශයෙන් තවතවත් ශක්තිමත් කිරීමේ අරමුණින්ම කරනු ලබන්නකි. එවිට එය විරෝධතා දේශපාලනය මර්ධනය කරමින් මටසිලිටු ප්‍රවිශ්ටයක් යොදන්නේය. තමා නොවන සියලු මතවාද තමාගේ පැවැත්ම වෙනුවෙන් උපයෝගී කරන්නට එය පෙළඹෙන්නේය. තමා සමග නොවන මතවාදවලට තමාට පහළින් සිටිමින් ප්‍රජාතන්ත්‍රය හා නිදහස ලබා ගන්නටද ඒය ඉඩ දෙන්නේය. තවද, දකුණේ පටහැනිතා තියුණුව තිබෙන විට හා වාමාංශිකයද අක්‍රීයව තිබෙන විට තම වර්ගයා ගැන නොසිතන වාමාංශික වඳ අදහස්වලට නොමඳව නිදහස ලබා දෙන්නේය. වාර්ගිකය පදනම් කර ගත් වාමාංශිකය ක්‍රියාශීලී වන විට එය නැවත්වීමට වඳ වාමාංශිකයට පැසිස්ට්වාදය නිදහස දෙන්නේය.

මේ අනුව පැසිස්ට්වාදය යනු එක් පරිමාණයක් පමණක් ඇති මත වාදයක් නොවේ. තමාගේ පැවැත්ම සඳහා එය ඕනෑම කපටිකමක් යොදා ගන්නේය. පැසිස්ට්වාදය ප්‍රචණ්ඩ කෝණයෙන් පමණක් විග්‍රහ කරන ක්‍රියාව වැරදිය. පැසිස්ට්වාදය සිය ප්‍රචණ්ඩකාරී දේශපාලන ලක්ෂණය පැසිස්ට්වාදය විසින්ම ලිහිල් කරන විට අත්දැකීම් බහුල දේශපාලනයද එයට හිමි මූලධර්මයන්ද වෙනස් අත්දැකීමකින් පැසිස්ට්වාදය අනුව යන විකෘති වාදයක් බවට පෙරලෙන්නේය.

අප වටා තිබෙන දේශපාලනයෙන් තොර අලසවාද පසුබිමෙහි ක්‍රියාත්මක වෙමින් පවතින අවස්ථාවාදය සහ බඩගෝස්තරවාදය  පැසිස්ට්වාදය පිටුපසට පත් වී නිතර නිතර රහත් වීම අපගේ ඉතිහාසය පුරා දැකිය හැකිය.

එමෙන්ම කොටින් පසුපසින් හා රජය පසුපසින් යමින් අතුරුදහන් වීම අප වටා ඇති පැසිස්ට් විරෝධී දේශපාලනයේ නොවෙනස් ඉතිහාසයයි. මෙසේ අතුරුදහන් වුවන් හදිසියේ හිස ඔසවමින් නිර්මාණය කරන දේශපාලනය වසන් වෙමින් සිට පසුව හෙළි වන්නේය.

මොවුන් සිය අතීතය පිළිබඳ ස්ව ඇගයීමකටද කිසි විටෙක සූදානම් නොවෙති. මෙහි සුවිශේෂී දේශපාලන ලක්ෂණය නම් පැසිස්ට්වාදයට විරුද්ධව කරන ලද සටන් දේශපාලනමය ලෙසින් පිළි නොගැනීමයි

මෙය මගින් තමන්ගේ මහජන විරෝධී දේශපාලනයට නැඹුරු වී පැසිස්ටවාදයේ සහය සමගය ඔවුන්ට නැවතත් දේශපාලනමය වශයෙන් මිදී එන්නට හැකි වන්නේ. එනම් මොවුන්ගේ තෝන් ලණුව වන්නේ පැසිස්ට්වාදයට හට ගන්නා දේශපාලන අර්බුදයයි.

ඉතිහාසයේ පැසිට්වාදය සශ්‍රීක වූ කාලවකවානුවල එය සිදුවූයේ ජනතාවගේ සහයෝගය සහිතවමය යන ඓතිහාසික සත්‍යය ජර්මනියේ හිට්ලර්ගේ පැසිට්වාදය පටන් ප්‍රබාකරන්ගේ පැසිට්වාදය හා වර්තමානයේ මහින්දගේ පැසිට්වාදය දක්වාද තහවුරු වේ. මේ කිසිවක් ප්‍රචණ්ඩත්වය මගින් තමාව ස්ථාපනය කර ගත් පැසිට්වාද නොව, මහජනයාව මෝඩ රැළක් බවට පත් කර ඒ මත ගොඩනැගුනු පැසිට්වාද වේ.

ඇතැම් විට ප්‍රචණ්ඩත්වය උපයෝගී කරමින්ද තවත් විටෙක එසේ නොකරමින්ද මෙම පැසිස්ට්වාදය තම පැවැත්ම තහවුරු කර ගනියි. මහජනයා අතර සමාජ හා දේශපාලන දැනුවත් බව වැඩි වන බව ඔවුන්ට පෙනෙන විට එළිපිට පෙන්වන ප්‍රචණ්ඩත්වය මගින් පැසිස්ට්වාදය තමාගේ පැවැත්ම තහවුරු කර ගනියි. එමෙන්ම, සමාජ හැඟීම වෙනුවට තනි පුද්ගල ආත්මාර්ථකාමී හැඟීම් උත්සන්න වන විට ප්‍රචණ්ඩත්වය නොවන මාර්ග මගින් පැසිස්ට්වාදය තම පැවැත්ම ස්ථිර කර ගනියි.

මාගේ මීට පෙර වන ලිපියෙහි  පැසිස්ට්වාදය සැම විටම මිනිසුන් යටපත් කිරීමෙන් පමණක් තම පැවැත්ම තහවුරු කරගන්නේ නැත. ඇයිද යත් පැසිස්ට්වාදය ඉතා සංකීර්ණ මතවාදයකි. එකකට වැඩි පැසිස්ට්වාදී කණ්ඩායම් සිටින විට හා දක්ෂිණාංශික පක්ෂ අතර පටහැනිතා දැඩිව තිබෙන විට තමාව රැක ගැනීමේ අරමුණින් වාමාංශික ප්‍රචාරවලට එය ඉඩ දෙනු ඇත හා  තමාට පසුපසින් සිටීමේ නිදහස එයට ලබා දෙනු ඇත. මෙමගින් එය තමාව ශක්තිමත් කර ගනු ඇත. අද රජයත් කොටි සංවිධානයත් කරමින් සිටින්නේ මෙයමය. මේ අතර තවත් කණ්ඩායම්ද තැන් තැන්වල බිහි වී සිටිති යැයි මා සඳහන් කළේ මෙම තත්ත්වයයි.

එමෙන්ම තමා ඇතුලත ඇති පටහැනිතා වර්ධනය වීමටද පැසිස්ට්වාදය ඉඩ නොදෙයි. එය ප්‍රචණ්ඩත්වය මගින් මෙන්ම ලිහිල් ක්‍රම මගින්ද පැසිස්ට්වාදය නැති කර දමන්නේය. තමාට පිටතින් ඇති පටහැනිතාවලට පැසිස්ට්වාදය විසඳුම් සොයන්නෙත් මෙලෙසින්මය. ඝාතණය කිරීම මෙන්ම දයාව පෙන්වීම දක්වා විවිධ ක්‍රමෝපා ඇති පැසිස්ට්වාදය ඉතා නම්යශීලී මතවාදයකි. නමුත් කිසිදු විසඳුමක් සාර්ථක නොවන විට ප්‍රචණ්ඩත්වය සීමාව ඉක්මවා මුදා හැරීමටද පැසිස්ට්වාදය පසුබට වන්නේ නැත.

අප උදාහරණයකට කොටින්ව ගනිමු. තමන් හැර අන් කිසි බලවේගයක් නොමැති වාතාවරණයක් බිහි කිරීමට ඔවුන්ගේ පැසිස්ට්වාදය ඇති කළ 1986-1992 කාලවකවානුවෙහි ඔවුන් ප්‍රචණ්ඩත්වය සීමා රහිතව කිසිදු තෙතමනයක් නොමැති එළිපිටම මුදා හැරියෝය. තමාගේ සංවිධානය නොවන සියල්ලන්වම එළිපිටම ඝාතණය කර දැම්මෝය. තමන්ගේ මතවාදයට එකඟ නොවන්නන්ව ප්‍රචණ්ඩත්වය මගින් මර්ධනය කර දැම්මෝය. නමුත් පසු කලෙක බලවේගයක් ලෙසින් දැන් සිටින්නේ තමන් පමණක් යැයි ඔවුන්ට නිශ්චය වූ පසු, ඝාතණ හා මර්ධන කොටින් විසින් කරන ලද්දේ ඉතා රහසිගතවය.  ඒ අතරම තමන්ගේ මතවාදය පිළිගැන්වීමේ සුහදශ්‍රීලී ක්‍රමෝපා ප්‍රසිද්ධියේ පුළුල් ලෙස කොටින් සිදු කළහ. එපමණක් නොව, යම් පමණකට තමන්ගේ මතවාද නොවන මතවාදවලටද ඉඩ දුන්හ. මෙමගින්ද කොටින් සැහෙන ජයක් අත් කර ගත් අතර පසුව ඔවුන් අතරම පටහැනිතා වැඩි වී සම්පූර්ණයෙන්ම ඔවුන් විනාශ වන්නට ආරම්භ වූ විට තමන්ගේම වරිගයා බිලි දෙමින් ඔවුන්  පිටුපස සැඟවෙමින් ඔවුන්ව ඉදිරියට තල්ලු කරමින් හා වනසමින් තමන් රැකෙන්නට කොටින් උත්සාහ කළහග පසුව එයද බැරි වූ තැන නිවට අන්දමින් සතුරාට යටත් වූහ.

මෙයට පෙර තමන්ගේ පැසිස්ට්වාදය ශක්තිමත්ව පැවති කාලයෙහි වෙනස් මතවාද සඳහා වන නිදහස යම් ප්‍රමාණයකට ලබා දීමටද කොටින් පසුබට නොවූ නමුත් පසුව කොටින් සංවිධානාත්මක වූ පසු වෙනස් මතවාද දරන්නන් බොහෝ දෙනෙකුව  ක්‍රමක්‍රමයෙන් තමන් වෙත කොටින් ඇද ගත්හ. මේ නිසා තමාගේම අදහස් පළ කරමින් කොටින් පිටුපසින් ඇතැමුන් පෙළ ගැසුනාහ. එමෙන්ම තමන් කොටින්ව භාවිතා කරන්නේ යැයිද, කොටින්ව හික්මවන්නේ යැයිද, නිදහසේ අපගේ අදහස් දැන් ප්‍රකාශ කරන්නේ යැයිද එම පුද්ගලයන් පුරසාරම් දොඩා ගත්හ. මේ අනුව පැසිස්ට්වාදයේ ප්‍රචණ්ඩත්වය නොවන මිත්‍රශීලී ගති පසුපස ඔවුන් ගිය අතර, පැසිස්ට්වාදයට මේ අවස්ථාවෙහි අවශ්‍ය වූයේද මෙයමය.

අද ලංකා රජය ක්‍රියා කරන්නේද මේ ආකාරයටමයි. එක් අතකින් තමන්ට විරුද්ධ වන්නන්ව මර්ධනය කරමින් ඔවුන් ඉවත් කරමින්ද, තවත් අන්තයකින් ප්‍රජාතාන්ත්‍රවාදී වෙස් ගනිමින් දෙබිඩි පිළිවෙතකින් අද ලංකා රජය ක්‍රියා කරමින් තම පැසිස්ට්වාදයේ පැවැත්ම තහවුරු කර ගනියි. ඡන්ද පැවැත්වීම, විරුද්ධ පක්ෂවලට ක්‍රියා කිරීමට ඉඩ දීම, අන්තවාදී දමිළ පක්ෂවල ක්‍රියාකාරකම් ඉවසීම, කොටින්ට විරුද්ධ වාමාංශික ක්‍රියාකාරකම්වලට අනුමැතිය දීම යනාදී ප්‍රචණ්ඩ නොවන ක්‍රියාකාරකම් අද රජයේ පැසිස්ට්වාදයේ තවත් දැකුම්කළු පැතිකඩක් වේ.

ඒමෙන්ම, කොටින් මෙන් අන්ධ ලෙසින් ප්‍රචණ්ඩත්වය මුදා හැරීමක් ලංකා රජය නොකරයි. ලංකා රජයේ කුරිරු බවෙහිද නැණවත් ප්‍රවේශයක් තිබේ. ප්‍රචණ්ඩත්වය ලංකා රජය සිදු කරන්නේද තෝරා බේරා ඉතා සියුම් ආකාරයෙනි. සමහර අවස්ථාවල තමාට විරුද්ධ වන්නන්ව විනාශ කිරීම තමාම නොකර එයට අවශ්‍ය වාතාවරණය අන් අයට ඇති කර දී නිහඬ වන්නේය.

කොටින්ගේ විනාශයෙන් පසුව අද ඉතිරි වී තිබෙන වෙනස් ස්වරූපයේ කොටි පැසිස්ට්වාදයට දැන් පෙර කළ සියලුම ක්‍රියාකාරකම් කළ නොහැක. එනම් ප්‍රචණ්ඩත්වය මගින් තම වරිගයා බිය වද්දා අවනත කිරීමේ හැකියාව එයට දැන් නැත. දැන් කොටින් මහාත්ම වෙසකින් හා මටසිලුටු ගතියක් පෙන්වමින් වර්තමානයෙහි තම අරමුණු ඉටු කිරීමට ක්‍රියා කරමින් සිටියි.

එමෙන්ම තමාට පිටින් තවත් සංවිධානයක් ඇති වීම වළක්වනු පිණිස තමා යටතේ සිටින්නන්ට හා තමා නොවන්නන්ට නිදහස ලබා දී ඇත. මෙමගින් තම පැවැත්ම ස්තිර කර ගැනීමට හා තම පැසිස්ට්වාදය රැක ගැනීමට එය ක්‍රියා කරමින් සිටින අතර මෙම උපාය මාර්ගය මගින් කොටින් නොවන දේශපාලන ක්‍රියාකාරකම් හිස එසවීමට එය ඉඩ නොදෙමින් සිටියි. අද පැසිස්ට්වාදය විසින් දේශපාලනය යැයි කරළි බස්වා තිබෙන්නේ මෙයයි. මේ අනුව රජය හා කොටි යන පාර්ශව දෙකම තමා නොවන සංවිධාන හා පක්ෂ සැලසුම් සහගතව තුරන් කරමින් සිටිති.

## பாசிசம் தன்னை நெகிழ்சிப்படுத்தித்தான், சமூகத்தில் தன்னை நிலைநிறுத்துகின்றது

**பாசிசத்தை எதிர்கொண்டு போராடும் ஆற்றலை இடதுசாரியம் இழக்கும் போது, பாசிசத்தின் நெகிழ்ச்சியான போக்கையே இடதுசாரி தன் புரட்சிகரமான அரசியலாக்க காட்டிவிடுகின்றது. இது பாசிசம் பற்றிய புரிதலை அரசியல்ரீதியாக திரித்து விடுகின்றது.**

**மிகவும் இறுக்கமான வன்முறை கொண்ட ஜனநாயக மறுப்பு, பாசிசத்தில் ஒரு அரசியல் குணாம்சமாகும். இதை பாசிசம் நெகிழ்ச்சிப்படுத்தும் போது, பாசிசத்தின் எதிர்த்தரப்பில் ஒரு அரசியல் பிளவை உருவாக்குகின்றது.**

1. **பாட்டாளி வர்க்க கட்சியற்ற உதிரிகளைக் கொண்ட சமூகத்தில் அல்லது கட்சிக்கு வெளியில் உள்ள உதிரிகளைக் கொண்ட சமூகத்தில்**

1. **பாசிசம் அவர்களை உள்வாங்கின்றது**
2. **முடியாத போது பாசிசம் அவர்களை தன் நிகழ்ச்சிநிரலுக்குள் பயன்படுத்துகின்றது.**

2. இந்த நெகிழ்ச்சிப் போக்கு கட்சிக்குள் முரண்பாட்டை உருவாக்குகின்றது.

1.பாசிசத்தை இழந்து வருவதாக அல்லது அதை கைவிட்டுவிட்டதாக கருதும் போக்கு சார்ந்து பாசிசத்தை தவறாக அணுகுகின்றது
2.இந்த நெகிழ்ச்சியான சூழலை பயன்படுத்துவது எப்படி என்ற விவாதம் குறிப்பானதாக மாறுகின்றது.

பாசிசம் தன்னைச் சுற்றிய வன்முறைக் கட்டமைப்பில் செய்கின்ற அரசியல் நெகிழ்ச்சிப் போக்கு, தன்னை மேலும் அரசியல் ரீதியாக பலப்படுத்தத்தான். எதிர்ப்பு அரசியலை ஒடுக்கியபடி, மென்மையான அணுகுமுறையை எதிர்ப்பு அரசியல் அல்லாத தளத்தில் கையாளுகின்றது. இதன் மூலம் தான் அல்லாத அனைத்தையும், தனக்கு பயன்படுத்த முனைகின்றது. தன்னுடன் அல்லாதவற்றுக்கு, தனக்கு கீழ் ஜனநாயகத்தையும் சுதந்திரத்தையும் வழங்குகின்றது. வலதுசாரிய முரண்பாடுகள் கூர்மையாக இருக்கும் போது, வர்க்க இடதுசாரியம் செயலற்றதாக இருக்கும் போது, வர்க்க சிந்தனை அல்லாத இடதுசாரிய மலட்டு கருத்துக்கு தாராளமாக சுதந்திரத்தை வழங்குகின்றது. வர்க்கப்போராட்டத்தை அடிப்படையாக கொண்ட இடதுசாரியம் செயலுள்ளதாகவுள்ள போது, அதைத் தடுக்கவும் பாசிசம் மலட்டு இடதுசாரியத்துக்கு சுதந்திரத்தை வழங்குகின்றது.

இப்படி பாசிசம் ஒற்றைப் பரிணாமம் கொண்டதல்ல. தன்னை நிலைநிறுத்த அது எல்லாவகையான தந்திரங்களையும் கையாளுகின்றது. பாசிசத்தை வெறும் வன்முறை ஊடாக மட்டும் பார்க்கின்ற பார்வை, அரசியல் திரிபிற்கான அரசியல் அடிப்படையாகும். பாசிசத்தின் குறிப்பான வன்முறை சார்ந்த மூர்க்கமான அரசியல் குணாம்சத்தை அது தானாக தளர்த்தும் போது, அனுபவம் சார்ந்த அரசியல் அடிப்படையும் இது சார்ந்த கோட்பாடும், மற்றொரு அனுபவத்தில் பாசிசத்தை சார்ந்து செல்லும் திரிபுவாதமாக மாறுகின்றது.

எம்மைச் சுற்றி அரசியலற்ற கலைப்புவாத அரசியல் பின்னணியில் இயங்கும் சந்தர்ப்பவாதமும், பிழைப்புவாதமும், பாசிசத்தின் பின் அடிக்கடி காணாமல் போனதே எமது வரலாற்று தொடர்ச்சியாக உள்ளது. மாற்று என்பது புலிக்கும், அரசுக்கும் பின் சென்று காணாமல் போனதே, எம்மைச் சுற்றிய பாசிச எதிர்ப்பு அரசியல் வரலாறாகும். இப்படிக் காணாமல் போனவர்களின், திடீர் திடீரென மீள உதித்து உருவாக்கும் அரசியல் மூடிமறைத்து வெளிப்படுகின்றது. தங்கள் கடந்தகாலத்தை சுயவிமர்சனமாக ஏற்றுகொள்வது கிடையாது. இதன் குறிப்பான அரசியல் குணாம்சம், பாசிசத்துக்கு எதிராக நடந்த போராட்டத்தை அரசியல் ரீதியாக அங்கீகரிப்பது கிடையாது. இதன் மூலம் தங்கள் மக்கள்விரோத

அரசியலைச் சார்ந்து, பாசிசத்தின் துணையுடன் தான் அவர்களால் அரசியல் ரீதியாக மீள முடிகின்றது. குறிப்பாக பாசிசம் சந்திக்கின்ற அரசியல் நெருக்கடிதான், இவர்களின் கடிவாளம்.

கடந்த வரலாறுகளில் பாசிசம் செழித்தோங்கிய காலத்தில், மக்களின் ஆதரவுடன் தான் என்பது வரலாற்று உண்மை. ஜெர்மனியில் கிட்லரின் பாசிசம் முதல் புலிப் பிரபாகரனின் பாசிசமாகட்டும், இன்று மகிந்தாவின் பாசிசமாகட்டும், இவை வன்முறை மூலம் மட்டும் தன்னை நிறுவிக்கொண்டதல்ல. மக்களை மந்தைகளாக்கி அதன் அரசியல் அடித்தளத்தில் தான் பலம் பெறுகின்றது.

பாசிசத்தை நிறுவவும், அதை பாதுகாக்கவும் வன்முறையைக் கையாள்வது என்பது, பாசிசம் தன்னளவில் ஏற்ற இறக்கம் கொண்டது. சமூகத்தின் அரசியல் விழிப்புணர்வும் சமூக உணர்வும் அதிகரிக்கும் போது, வெளிப்படையான வன்முறை மூலம் தன்னை நிலைநிறுத்துகின்றது. சமூக உணர்வுக்கு பதில் தனிமனித சுயநல உணர்வுகளும் மந்தைத்தனமும் சமூக உள்ளடக்கமாகும் போது, வன்முறை அல்லாத வழிமுறைகள் மூலம் பாசிசம் சமூகத்தில் தன்னை நிலைநிறுத்துகின்றது.

இந்த வகையில்தான் "பாசிசம் எல்லாவற்றையும், எல்லாநேரமும் ஒடுக்கித்தான் தன்னை நிலை நிறுத்துவது கிடையாது. பாசிசம் நெளிவு சுழிவானது. தன்னையொத்த இரண்டு பாசிசங்கள் நிலவும் போதும், வலதுசாரிய முரண்பாடுகள் கூர்மையாக உள்ள போது, தன்னை தற்காத்துக் கொள்ள இடதுசாரிய பிரச்சாரத்தை அனுமதிக்கின்றது. தன்பின்னால் அது இருப்பதற்கு சுதந்திரத்தை வழங்குகின்றது. அதைக்கொண்டு அது தன்னைப் பலப்படுத்துகின்றது. இதைத்தான் இன்று அரசும், புலியும் செய்கின்றது. இதற்குள் அங்குமிங்குமாக பலர்" என்று எனது முந்தைய கட்டுரையில் குறிப்பிட்டு இருந்தேன்.

பாசிசம் தன்னுள்ளான முரண்பாட்டை அப்படியே வளரவிடுவது கிடையாது. அதை வன்முறை மற்றும் பல நெகிழ்ச்சியான வழிகளில் தீர்க்கின்றது. அது போல் வெளி முரண்பாடுகளையும் கையாளுகின்றது. படுகொலைகள் முதல் சலுகை கொடுப்பது வரை, பாசிசம் நெகிழ்ச்சியான தன்மைகொண்டது. இதை தீர்க்க முடியாது முரண்பாடுகளில் சிக்கி அழியும் போது, வன்முறையை வரைமுறையின்றி ஏவுகின்றது.

புலிகளை எடுப்போம். புலிகள் தாமல்லாத யாருமற்ற அதிகாரத்தை உருவாக்க, அதாவது தங்கள் பாசிசத்தை நிறுவிய 1986-1992 காலத்தில், வெளிப்படையான வன்முறையை ஈவிரக்கமற்ற வடிவத்தில்

கையாண்டனர். தாம் அல்லாதவர்களை வெளிப்படையான அரசியல் படுகொலைகள் மற்றும் வன்முறைகள் மூலம் தான் ஒடுக்கினர். தாங்கள் மட்டும் என்பதை அவர்கள் உறுதி செய்தபின், மிக இரகசியமான வடிவத்தில் படுகொலைகளையும் வன்முறைகளையும் செய்தனர். அதேநேரம் வெளிப்படையாக தாமல்லாதவர்களை தம்முடன் இணங்கிச் செல்ல வைக்கும் அணுகுமுறையைக் கையாண்டனர். அதாவது தாம் அல்லாத மாற்றுக் கருத்தை, தமக்கு கீழ் இயங்க அனுமதித்தனர். இதில் கூட கணிசமாக புலிகள் வெற்றி பெற்றனர். இந்தப் பாசிசம் முரண்பாடுகளால் முற்றி அழிந்த தறுவாயில், சொந்த மக்களைக் கொன்றும், வன்முறையை ஏவியும் தம் பின்னால் வைத்திருக்க முனைந்து இறுதியில் அவர்களை பலிகொடுத்து தம்மை பாதுகாக்க முனைந்தனர். முடியாது போன போது, தங்கள் எதிரியிடமே சரணடைந்தனர்.

இதற்கு மாறாக தங்கள் பாசிசம் பலமாகிய காலத்தில், சுதந்திரத்தையும், மாற்றுக் கருத்துக்கான அங்கீகாரத்தையும், புலிகள் கூட தமக்கு கீழ் ஒரு வரைமுறைக்குள் வழங்கினர். இந்த வகையில் பாசிசம் தன்னை கட்டமைத்த போது, மாற்றுத் தளத்தில் இருந்த பலரை புலிகள் தமக்குள் உள்வாங்கினர். தங்கள் சுதந்திரமான கருத்து என்று கூறிக்கொண்டு பலர் புலிக்கு பின்னால் நின்றனர். புலியைக் பயன்படுத்துகின்றோம், புலியை திருத்துகின்றோம், எங்கள் கருத்தைச் சொல்லுகின்றோம், வெளியில் இருந்து என்ன செய்வது என்று கூறி, விதவிதமாக பாசிசத்தின் நெகிழ்ச்சிப் போக்கின் பின் சென்றனர். இப்படி மக்களை சார்ந்து பாசிசத்தை எதிர்க்கும் அரசியலை துறந்தோடினர். இதைத்தான் பாசிசம் விரும்பியது.

இன்று இலங்கை அரசு கூட இந்த வகையில்தான் இயங்குகின்றது. தன் எதிர்ப்பாளர்களை கடுமையாக ஒடுக்கி அவர்களை அரங்கில் அகற்றியபடி, மறுதளத்தில் ஜனநாயக வடிவங்கள் மூலம் தான் பாசிசத்தை நிலைநிறுத்துகின்றது. தேர்தல், எதிர்க்கட்சிகளை அனுமதித்தல், மிதவாத தமிழ்தேசியத்தை அனுமதித்தல், புலிக்கு மாற்றான இடதுசாரியத்தை அனுமதித்தல் என்ற பலபடித்தான ஒரு நெகிழ்ச்சியான அரசியல் போக்கில் தான் அரச பாசிசம் இயங்குகின்றது.

குணாம்ச ரீதியாக பார்த்தால், புலியின் வடிவில் இருந்து மிதவாதத் தன்மை கொண்டது. ஆனால் மிக நுட்பமான கொடூரமானது. புலியைப் போல் கண்மூடித்தனமாக பாசிசத்தை நிறுவும் போக்கில், வன்முறையை கையாள்வது கிடையாது. அது நுட்பமாக தேர்ந்தெடுத்து கையாளுகின்றது. தன் குறிப்பான எதிரியை தனிமைப்படுத்தி அழிக்க, மற்றவர்களுக்கு சுதந்திரத்தை வழங்குகின்றது.

புலிகளின் அழிவின் பின்னால் எஞ்சிய புலத்து புலிப் பாசிசம், முன்னைய வடிவங்களில் இயங்க முடிவதில்லை. அதாவது தன் வன்முறையின் மூலத்தைக் காட்டி சமூகத்தை அடிபணிய வைக்கும் போக்கில், தொடர்ந்து தன்னை நிலைநிறுத்த முடியாதுள்ளது. இது தன்னை தக்கவைக்கும் மிக நெகிழ்ச்சி போக்கு கொண்ட ஒன்றாக காட்டிக்கொண்டு தான் இன்று இயங்குகின்றது.

தனக்கு வெளியில் தன்னை மீறி ஒன்று உருவாகிவிடக் கூடாது என்பதால் தான், தனக்கு கீழ் தான் அல்லாதவர்களுக்கு சுதந்திரத்தை வழங்குகின்றது. இதன் மூலம் தன்னை அனைத்துமாக தொடர்ந்து தக்கவைக்க முனைகின்றது. தான் அல்லாத எதுவும் தனித்துவமாக உருவாகக் கூடாது என்பதுதான், அது தான் அல்லாதவர்களுக்கு வழங்கும் சலுகைகள். இதன் மூலம் தன் பாசிசத்தை தொடர்ந்து தக்கவைக்க முனைகின்றது. இது புலியல்லாத மாற்று அரசியல் தளத்தை, அரசியல் ரீதியாக தொடர்ந்து நீக்கம் செய்கின்றது. பாசிசம் இதைத்தான் இன்று அரசியலாக முன்தள்ளுகின்றது. அரசு புலி இரண்டும் ஒரே அச்சில், தன்பின்னால் மாற்று அரசியலை முன்தள்ளி அதை அரசியல் நீக்கம் செய்கின்றது.

பி.இரயாகரன்
30.11.2010